https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-2 April 2025

Published on 14, April-2025 ISSN: 3049-2688 (Online)

# சூழலியத் திறனாய்வு (Eco Criticism) நோக்கு : ஒக்கூர் மாசாத்தியார் பாடல்கள்

**முனைவர் பி. பாலசுப்பிரமணியன்**
உதவிப் பேராசிரியர்
முதுகலைத் தமிழாய்வுத்துறை
பச்சையப்பன் கல்லூரி
சென்னை - 30

**ஆய்வுச் சுருக்கம்**

*உலகம் முழுவதும் நிலவிக் கொண்டிருக்கின்ற சுற்றுச்சூழல் மாசுபாடும் காலநிலை மாற்றமும் மனித அழிவை நோக்கி நகர்த்திக் கொண்டிருக்கிறது. இயற்கை சமன்குலைந்து எதிர்வினையாற்றுகிறபோதுதான் மனிதர்கள் விளிப்படைகிறார்கள். அதற்கு முன்பு தமது சுயதேவைக்காகவும் பகட்டு வாழ்க்கைக்காகவும் இயற்கையைத் தன்வயப்படுத்தி அழித்தொழிக்கும் வேலையைச் செய்துள்ளனர். பிரச்சினை வருகிறபோது மட்டுமே தீர்வை நோக்கி நகர்கிற மனப்பாங்கில் வாழ்வது என்பது இன்று எதார்த்தமாகிப்போனது. தொழில் நுட்பத்தின் அசுரவளர்ச்சி, இயந்திரமய மாதல், தொழிற்சாலைகளின் பெருக்கம், கழிவுநீர்த் தேக்கம், நிலம், நீர், காற்று, ஆகாயம் குப்பைகளாதல், இயந்திரக் கழிவுகள் கடலில் கொட்டப்படுதல், மலை, காடு, நிலம், நீர் அனைத்தும் தனியார்மயமாதல், நகர்மயத்திற்காக மக்கள் அப்புறப்படுத்தப்படல், நீர் மேலாண்மை பற்றிய புரிதலின்மை என மனிதனைச் சுற்றி விசம் பரவிக் கிடக்கிறது. இயற்கையிலிருந்து மனிதர்கள் அந்நியப்பட்டு நிற்கும் இன்றைய சமூகம் சுற்றுப்புறச்சூழல் குறித்து ஆரோக்கியமாக உரையாடத் தொடங்கியிருக்கிறது. கலை, இலக்கியங்கள் வாயிலாகப் பெரும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிலையில் உருவானதுதான் சூழலியத் திறனாய்வு. இத்தகைய சூழலியல் பார்வையைச் சமகாலப் படைப்பாளிகள் தமது படைப்பில் வெளிப்படுத்தியிருக் கிறார்களா? என்ற கேள்வி இருக்கிறது. சங்கப் பாடல்களில் சூழலியல் பார்வை படைப்பாளிகளிடம் நிரம்பக் கிடப்பதைக் காணமுடிகிறது. குறிப்பாக, ஒக்கூர் மாசாத்தியாரின் சூழலியப் பார்வை குறித்து இக்கட்டுரை ஆராய்கிறது.*

*முதன்மைச் சொற்கள்:* Eco Criticism, *சூழலியல், முதற், கரு, உரிப்பொருட்கள், திறனாய்வு, கோட்பாடு, சூழலியல் திறனாய்வு, திணைக்கோட்பாடு.*

## முன்னுரை

சங்க இலக்கியம் காலத்திற்கேற்பப் புதிய வாசிப்பிற்கு இடமளிக்கிறது. பல்துறையினர்

சங்கப்பாடல்களைப் பாடியிருக்கின்றனர். இனக்குழு, நிலவுடைமை, பேரரசு கால கட்டம் சார்ந்த பாடல்களின் தொகுப் பாக இதனைப் புரிந்து கொள்ள வாய்ப்பிருக்கிறது. தமிழ்மரபு கவிதை அடிப்படையிலானது. இந்தக் கவிதை களின் உள்ளடக்கம் பலவாறாக இருப்பி னும் முதற், கரு, உரிப்பொருள்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பவைகளாகப் பழம் பாடல்கள் இருந்திருக்கின்றன என அறியமுடிகிறது. குறிப்பாக, சங்க இலக்கியப் பெண்பாற் புலவர்களின் பாடல்களில் இயற்கை பற்றிய பதிவுகள் மிகுதியாக இடம் பெற்றுள்ளன. சங்கப் பாடல்களைப் பாடிய புலவர்களின் எண்ணிக்கை 473ஆக இருந்தாலும் பெண் கவிஞர்களின் எண்ணிக்கை 41 ஆகும். ஆனால், 38, 30, 34, 27, 41, 25, 45 எனப் பெண்பாற் புலவர்களின் எண்ணிக்கை யில் தமிழ் அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகள் இருந்ததையும் அறிய முடிகிறது. இறுதியாக, 41 பெண்பாற் புலவர்கள் பாடிய பாடல்களின் எண்ணிக்கை 181 என்று வரையறுக்கப் பட்டுள்ளதைக் காணலாம். இந்த 181 பாடல்களையும் சூழலியத் திறனாய்வு நோக்கில்ஆர -ாயலாம். ஆனால், இக் கட்டுரை ஒக்கூர் மாசாத்தியார் பாடல் களைச் சூழலியல் திறனாய்வு நோக்கில் ஆராய்கிறது.

## ஒக்கூர் மாசாத்தியார்

சங்ககாலப் பெண்பாற்புலவர்களுள் குறிப்பிடத்தக்கவர். சிவகங்கைமாவட்டம் திருக்கோட்டியூர் அருகிலுள்ள ஒக்கூர் என்னும் ஊரைச் சார்ந்தவர். இவரது இயற்பெயர் மாசாத்தி என்பர். பௌத்த சமயத்தைத் தழுவிய சங்கப் பெண்பாற் புலவர் என்றும் இவரைக் குறிப்பிடுவர். இவர் குறுந்தொகையில் 126, 139, 186, 220, 275 ஆகிய முல்லைத்திணையில் ஐந்து பாடல்களும் மருதத்திணையில் ஒரு பாடலும் என ஐந்து பாடல்களையும் அகநானூற்றில் 324, 384 ஆகிய இரண்டு முல்லைத்திணைப் பாடல்களையும் புறநானூற்றில் 279ஆவது மூதின்முல்லை துறையிலமைந்த வாகைத்திணைப் பாடல் ஒன்றையும் பாடியுள்ளார். இவர் பெயரிலமைந்த 8 பாடல்களுள் 7 பாடல் அகம் பற்றியும் ஒரு பாடல் புறம் பற்றியும் பாடப்பட்டுள்ளன. புறப்பாடல் அனைவரையும் இழந்து தமது மகனைப் போருக்கு அனுப்பும் பெண் மனத் துணிவை மறுக்கும் பாடலாக அமைந்துள்ளது.

## சூழலியத் திறனாய்வு

சூழலியல் திறனாய்வு பற்றிப் பல்வேறு விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனாலும் அமெரிக்காவில் உள்ள நெரேடா (Nerada) பல்கலைக்கழகத்தில் 'இலக்கியமும் சுற்றுச்சூழலும்' என்ற தனித்துறையில் பேராசிரியராகப் பணி யாற்றும் செரில் கிலாட்பெல்டி (Cheryil Glotfelty),

“இலக்கியத்திற்கும் சுற்றுச்சூழலுக்கும் உள்ள உறவினைக் கற்பதே சூழலியல் திறனாய்வு” என்கின்றார். ஆனால், சுற்றுச்சூழல் என்பதற்கும் இயற்கை என்பதற்கும் பெருத்த வேறுபாடு இருக்கிறது. எனவே, இலக்கியத்திற்கும் இயற்கைக்கும் உள்ள உறவினைக் கற்பதே சூழலியல் திறனாய்வு என வரையறுப் பதே பொருத்தமாக இருக்கும் எனப் பலர் கருதுகின்றனர். செரில் கிலாட் பெல்டி இச்சூழலியல் திறனாய்விற்குப் பல பங்களிப்புகள் செய்த ஒரு சிறந்த கல்வியாளராக அறியப்படுகிறார்.

”சூழலியல் திறனாய்வு (Eco Criticism) என்ற சொற்கூட்டை முதன்முதலில் பயன்படுத்தியவராக வில்லியம் ரூக்கர்ட் (William Rueckert) என்பார் கருதப் படுகிறார். இவர் 1978இல் தான் எழுதிய “இலக்கியமும் சூழலியலும் சூழலியல் திறனாய்வில் ஒரு சோதனை“ (Literature and Ecology: An Experiment in Eco criticism) என்ற கட்டுரையில் தான் இச்சொற் கூட்டைப் பயன்படுத்தினார்.

கிட்டத்தட்ட பத்தாண்டுகளாக இது குறித்து யாரும் பேசப்படாத சூழலில் 1989இல் நடந்த மேற்கத்திய இலக்கியக் கழகக் கூட்டத்தில் அப்பொழுது ஒரு கல்லூரி மாணவியாக இருந்த செரில் கிலாட்பெல்டிதான் வில்லியம் ரூக்கர்ட்டின் அந்தச் சொற்கூட்டை மீண்டும் பயன்படுத்திச் சூழலியல் திறனாய்விற்குத் தன் கட்டுரையின்

மூலம் உயிர் கொடுத்தார். மேலும் இவர் ஹெரால்டு ப்ரோம் (Harold Fromm) என்பாருடன் இணைந்து சூழலியல் திறனாய்வு குறித்து மிகவும் அடிப்படை யான பெரிதும் பயன்படக்கூடிய ஒரு கட்டுரைத் தொகுப்பினைக் (The Ecocrticism Reader: Landmarks in Literary Ecology, University of Georgia press, 1996) கொண்டு வந்தார்.

1992இல் அமெரிக்காவில் நிறுவப்பட்ட இலக்கியம் மற்றும் சுற்றுச்சூழலுக்குமான கல்வி குறித்த சங்கம் (The Association for the study of Literature and Evvironment – ASLE) நிறுவப்பட்டது. அதில் துணை நிறுவனராக இருந்து செயல்பட்டார். இச்சங்கம் 1993இல் தனக்கென ஓர் இதழும் கொண்டு வந்தது. இவ்வாறு சுற்றுச்சூழல் திறனாய்வில் செரில் கிலாட்பெல்டி முக்கியமான கல்வியாள ராக அறியப்படுகிறார்.

டேவிட் மாசல் (David Mazal) என்பார் சூழலியல் திறனாய்விற்கு ஒரு முக்கியமான பங்களிப்பு செய்தார். 'ஒரு நூற்றாண்டுத் தொடக்க காலச் சூழலியல் திறனாய்வுகள்' (A Century of Early Eco Criticism -1864-1964) என்ற ஒரு கட்டுரைத் தொகுப்பு நூலை வெளியிட் டார். இதன் மூலம் சூழலியல் திறனாய்விற்கு ஒரு வரலாற்று முகத்தை உருவாக்கினார். இலக்கிய உருவாக்கத்தில் தொடர்ந்து இயற்கைக்கும் மனிதனுக்கு மான உறவு குறித்த தேடல் ஒரு பெரும் வெளியாகச் செயல்பட்டு வந்துள்ளது என்கிற உண்மை வெளிக்கொணரப் பட்டது. தொடர்ந்து லாரன்ஸ் பௌஎல் (Lawrence Buell) என்பவரால் இது ஒரு முக்கியான இலக்கிய இயக்கமாக வளர்த்தெடுக்கப்பட்டது. ‘சுற்றுச்சூழல் திறனாய்வின் எதிர்காலம்‘ என்ற அவருடைய நூல் பின் அமைப்பியல் கோட்பாடுகளையும் பயன்படுத்திக் கொண்டு இத்திறனாய்விற்குச் செறிவூட் டியது. மேலும் சூழலியலும் பெண்ணிய மும், சூழலியமும் அறமும், சூழலியலும் அரசியலும், சூழலியலும் பொருளாதார மும் முதலிய தலைப்புகளில் ஆராய்ந்து சூழுலியலைப் பெரிய அளவில் வளர்த்தெடுத்தது. அவருடைய மற்றொரு நூலான “சுற்றுச்சூழல் கற்பனைகளும் அழியும் பூமி குறித்த இலக்கியங்களும்“ என்ற நூலும் சூழலியல் கோட்பாட்டி ற்குப் பெரிதும் பங்களிப்பைச் செய்துள்ளது. சூழலியம் திறனாய்வின் மையப் புள்ளியாக விளங்கும் நிலம், வெளி, மொழி, கற்பனை, அரசியல், அறம் முதலியவை குறித்து விரிவாக ஆராய்கிறது இந்நூல்.

அமெரிக்காவில் சூழலியல் திறனாய்வு இயற்கை குறித்து எழுதப்பட்ட புனை கதை அல்லாத எழுத்துகளை முதன்மைப் படுத்தித்தான் முன்மொழியப்பட்டது. இயற்கை ஆர்வலர்களான ஆ.டபிள்யூ. எமர்சன் (1803-1882), மார்க்ரெட் புல்லர் (1810-1850), ஹெச்.டி.துரோ (1817-1862) ஆகியோர் எழுதிய இயற்கை குறித்த கட்டுரைகளை இத்திறனாய்வாளர்கள் தங்கள் திறனாய்வுக் கோட்பாட்டை வளர்த்தெடுக்கப் பயன்படுத்திக் கொண்டனர்.

இதேபோல் 1990களில் (1980களில் அமெரிக்காவில் சூழலியல் திறனாய்வு தோன்றியது) இங்கிலாந்தில் இச்சூழலியல் திறனாய்வு பரவிய போது அங்கே இது பெரும்பாலும் 'பச்சைத் திறனாய்வு '(Green Criticism) என்ற சொற்கூட்டால் அழைக்கப்பட்டது.

அமெரிக்காவில் எமர்சன், துரோ போன்ற கட்டுரை எழுத்தாளர்களின் எழுத்துகள் சூழலியல் திறனாய்வில் முதன்மை பெற்றது என்றால் இங்கிலாந் தில் வேர்ட்ஸ்வொர்த்தினுடைய கிராமம் சார்ந்த பாடல்கள் சூழலியல் திறனாய் வின் நோக்கில் முதன்மை பெற்றன. அவருடைய The Prelude, Home at Grasmere, The Recluse முதலிய படைப்புகள் சூழலியல் திறனாய்வு நோக்கில் புது விளக்கம் பெற்றன.

இயற்கைக்கும் மனிதர்களுக்குமான பிணைப்பு எவ்வளவு ஆழமானது; உணர்வுபூர்வமானது; அது எவ்வாறு இங்கிலாந்தில் ஏற்பட்ட தொழிற் புரட்சியினாலும் நகரமயமாதலினாலும் ஊனப்பட்டுப் போகின்றது என்பதெல் லாம் வேர்ட்ஸ்வொர்த் கவிதைக்குள் அமைந்து கிடக்கின்றது என்பது வெளிக் கொணரப்பட்டது” என்று இலக்கியமும்

திறனாய்வுக் கோட்பாடுகளும் என்ற நூலில் க.பஞ்சாங்கம் சூழலியல் திறனாய்வு குறித்து விளக்கிச் செல்கிறார்.

## தமிழில் சூழலியல் கோட்பாடு

தமிழ் இலக்கியத்திலும் சூழலியல் திறனாய்வை மேற்கண்டவாறு சங்க இலக்கியப் பாடல்களிலும் தொல்காப்பி யரின் திணைக் கோட்பாட்டிலும் நிகழ்த்திக் காட்டுகிறார் பேராசிரியர் நிர்மல் செல்வமணி (திருவாரூர் மத்தியப் பல்கலைக்கழகத்தில் ஆங்கிலத் துறைப் பேராசிரியராகப் பணியாற்றியவர்). “தன்னுடைய நூல்களுக்கு Tinai I, II & III என்றே பெயர் சூட்டிச் சங்க இலக்கியக் கவிதைகளையும் தமிழர்தம் திணைக் கோட்பாட்டையும் சூழலியல் திறனாய்வு மூலமாக உலக அரங்கிற்கு எடுத்துச் செல்கிறார். சூழலியல் திறனாய்விற் கென்று ஓர் ஆங்கில இதழையும் கொண்டு வருகிறார் (Indian journal of Eco-criticism).

நிர்மல் செல்வமணி தொல்காப்பியரின் முதற்பொருள், கருப்பொருள், உரிப் பொருள் கோட்பாட்டோடும் சங்க இலக்கியப் பாடல்களோடும் சான்று காட்டி விளக்கும் போது சூழலியல் திறனாய்வின் அருமை புலப்படுகிறது. தமிழர்தம் திணைக் கோட்பாடு புது வெளிச்சத்தில் பொலிவு பெறுகிறது. சங்க இலக்கியம் மட்டுமல்ல, இடைக்காலப் பக்தி இலக்கியம், ஐம்பெரும் காவியங் கள், சிற்றிலக்கியங்கள், தல புராணங்கள் எனப் பலவும் சூழலியல் திறனாய்வின் மூலம் புது விளக்கங்கள் பெறக் காத்திருக்கின்றன” என்கிறார் க. பஞ்சாங்கம்.

## சூழலியல் திறனாய்வின் அணுகுமுறைகள்

சூழலியல் திறனாய்வின் மூலம் இலக்கியத்தை எவ்வாறெல்லாம் அணுகலாம் என்பதைக் கீழ்க்கண்டவாறு வரிசைப்படுத்துகிறார் க. பஞ்சாங்கம்.

1. ஒரு மொழியில் இடம் பெற்றுள்ள புகழ்பெற்ற இலக்கியங்களை சூழலியல் பார்வையில் அணுகி அந்த இலக்கியங் களில் இயற்கை உலகம் எவ்வாறு அடையாளப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதில் கவனம் குவித்து ஆராயலாம்.
2. இலக்கியத்தில் சூழலியல் சார்ந்த கருத்தாக்கங்கள் பாடுபொருளாகி இருக்கும் தன்மையை வெளிக் கொணர்தல்.
3. இயற்கையைப் பாடுதல் என்பதையே குறியாகக் கொண்டு பாடிப் புகழ் பெற்ற கவிஞர்களின் கவிதைகளைச் சூழலியல் நோக்கில் விளக்குதல்.
4. உயிரியல் ஆய்வு மூலம் கிடைத்த பல்வேறு நுட்பமான தகவல்களை முன்னிறுத்தி வட்டார இலக்கியங் களை மட்டுமல்லாமல் பயண இலக்கியம், நினைவுக் குறிப்புகள், கட்டுரைகள் ஆகியவைகளையும் ஆராய்தல்.
5. சூழலியல் திறனாய்வின் மிக முக்கியமான அணுகுமுறை இது. அதாவது வாழ்வில் ஒவ்வொன்றும் சமூகக் கட்டுமானத்தினாலும் மொழி யின் கட்டுமானத்தினாலும் நிர்ணயி க்கப்பட்டவை என்ற கோட் பாட்டுப் பார்வையிலிருந்து வெளியேறி, சூழலியல் திறனாய்வின் அணுகு முறையான ‘இந்த இயற்கை நம்மை விட மேலானது, நமக்குப் புறத்தே தனியாக இயங்குவது’ என்ற கோணத்தில் இலக்கியக் கல்வியை நடத்திச் செல்வது’.

இவ்வாறு சூழலியல் திறனாய்வின் அணுகுமுறையோடு அணுகும் போது பழைய இலக்கியத்திலிருந்து நவீன இலக்கியம் உட்பட அனைத்தும் புதிய வெளிச்சத்தை அளிப்பதற்கான வாய்ப்பு டையதாக மாறுகின்றன. மேற்கண்ட அணுகுமுறையிலிருந்து ஒக்கூர் மாசாத்தி யாரின் பாடல்களை ஆராயலாம்.

## ஒக்கூர் மாசாத்தியர் பாடல்கள் – சூழலியப் பார்வை

**பொருள்வயிற் பிரிந்து சென்ற தலைவன் உரிய காலத்தில் வரவில்லை. தலைவி ஆற்றியிருக்கிறாள். அப்போது, தோழியி டம்,** அன்புத் தோழியே! இன்பமான இளமையின் அருமையினை எண்ணாத வராகப் பொருள் தேடப் பிரிந்து சென்ற

காதலர் இவ்விடத்திற்கு இன்னும் திரும்ப வரவில்லை; வேறு எவ்விடத்தில் உள்ளாரோ? என நான் எண்ணியிருக்க, குளிர்ந்த கார்காலமானது மழை பெய்வித்தலால், முல்லைப் பூங்கொடியில் ஒளி சிந்தும் தொகுப்பு அரும்புகளே அக்கொடியின் பற்களாக என்னைக் கண்டு நகைக்கின்றனவே! என் செய்வேன்? என்பதை,

இளமை பாரார் வளம்நசைஇச் சென்றோர்

இவணும் வாரார்; எவண ரோ?' என,

பெயல் புறந்தந்த பூங்கொடி முல்லைத்

தொகுமுகை இலங்கு எயிறு ஆக

நகுமே தோழி! நறுந்தண் காரே.

என்ற முல்லைத்திணையிலமைந்த குறுந் தொகை 126ஆவது பாடல் வெளிப் படுத்துகிறது. இப்பாடலில் தலைவன் பிரிவைப் பற்றிய செய்தி குறைந்த அடிகளில் இருப்பினும் கார்காலம், மழை, முல்லைக்கொடி, முகை என்று முல்லைநில முதற்பொருளும் கருப் பொருள்களும் இடம்பெற்றிருப்பதை அறியமுடிகிறது. தலைவிய ஆற்றியிருத்தல் உரிப்பொருளாகப் பாடலில் இடம் பெற்றிருக்கிறது.

ஒக்கூர் மாசாத்தியார் ஒரே ஒரு மருத நிலப்பாடலைப் பாடியுள்ளார். தலைவி, தலைவனை நோக்கி, வேலியருகில் உள்ள காட்டுப் பூனைக் கூட்டம் மாலைக் காலத்தில் வந்ததாக எண்ணிப் பாது காப்புக்குப் புகுமிடத்தை அறியாமல், மயக்கமும் துன்பமும் உடைய குஞ்சுக் கூட்டத்தினை, வீட்டில் வாழ்கின்ற குறுங்கால்களை உடைய பெட்டைக் கோழி கூவி அழைத்தது போல, உன்னுடைய பரத்தையரும் துயரம் தருகின்ற பழிச்சொற்களுடன் எம்முடைய வீதியில் இனிமேல் வாராமல் இருப்பாராக! என்பதை,

மனைஉறை கோழிக் குறுங்காற் பேடை,

வேலி வெருகினம் மாலை உற்றெனப்

புகும் இடம் அறியாது தொகுபு உடன் குழீஇய

பைதற் பிள்ளைக் கிளைபயிர்ந் தாஅங்கு

இன்னாது இசைக்கும் அம்பலொடு

வாரல், வாழியர்! ஐய எம் தெருவே.

என்ற மருதத்திணையிலமைந்த குறுந் தொகை 139ஆவது பாடல் வெளிப் படுத்துகிறது. பரத்தையர் நான் குடியிருக் கும் தெருவில் பழிச்சொற்களோடு வலம் வருதல் கூடாது என்பதே தலைவியின் வேண்டுகோள். இந்தக் கூற்று ஓரடியில் முடிந்து விட்டது. மீதமுள்ள செய்திகள் வெருகுப்பூனை, பெட்டைக்கோழி, கோழிக் குஞ்சு போன்ற கருப்பொருள்க ளையும் வயல்சார்ந்த நிலத்தில் கோழியும் பூனையும் இடம்பெறும் என முதற் பொருளையும் பரத்தையரைச் சுட்டிக் காட்டியதால் ஊடல் எனும் உரிப் பொருளையும் இப்பாடல் சுட்டிக் காட்டுகிறது எனலாம்.

முல்லைநிலத் தலைவி ஒருத்தி, அன்புத் தோழியே! இடி முழக்கத்துடன் கார் காலமும் தோன்றியது; முல்லை நிலத்தின் கொல்லைப் புறங்களில் மழையும் பெய்தது; மெல்லிய முல்லைக் கொடிகள் பற்களைப் போல மொட்டு கள் அரும்புகின்ற நாட்டை உடைய தலைவனுக்காக என்னுடைய கண்கள் உறக்கத்தைத் துறந்தன என்பதை,

ஆர்கலி ஏற்றோடு கார்தலை மணந்த

கொல்லைப் புனத்த முல்லை மென்கொடி

எயிறுஎன முகையும் நாடற்குத்

துயில்துறந் தனவால் தோழி! எம் கண்ணே.

என்ற முல்லைத்திணையிலமைந்த குறுந் தொகை 186ஆவது பாடல் விளக்கம் தருகிறது. இந்தப் பாடலில் ஆற்றியிருத் தல் என்ற உரிப்பொருளும் கார்காலம், மழை, கொல்லைப்புறம், முல்லைக் கொடி, முகை போன்ற முதற், கருப் பொருள்களும் இடம்பெற்றுள்ளன.

முல்லைத் தலைவி அவளது தோழியிடம், அன்புத் தோழியே! பழைய மழையினால் செழித்த புனத்தி லுள்ள புதிய வரகு பயிர்க் கதிர்களை ஆண்மான் மேய்ந்த மையால், குறுகிய நுனியை உடைய கதிரில்லாத வரகுத்தாளின் அருகில் முல்லையும் பூத்துள்ளது. காட்டுப் பூனை

சிரிப்பது போன்ற தோற்றமுடைய பசும்பூவின் மென்மை வாய்ந்த குறுகிய முல்லை அரும்புகளும் பூத்துள்ளன. அத்தன்மையுடைய மணமுள்ள மலர் களோடு விளங்கும் முல்லை நிலத்தில், வண்டுகள் வட்டமிடும் மாலைப் பொழுதிலும் அவர் வரவில்லை. பொருள் தேடுதல் காரணமாகப் பிரிந்து சென்றவர், கூடி மகிழ வாராமையினை நீயும் காண்பாயாக! என்பதை,

பழமழைக் கலித்த புதுப்புன வரகின்

இரலை மேய்ந்த குறைத்தலைப் பாவை

இருவி சேர் மருங்கில் பூத்த முல்லை,

வெருகு சிரித்தன்ன, பசுவீ மென்பிணிக்

குறுமுகை அவிழ்ந்த நறுமலர்ப் புறவின்

வண்டுசூழ் மாலையும், வாரார்;

கண்டிசின் தோழி! பொருட் பிரிந் தோரே.

என்ற முல்லைத்திணையிலமைந்த குறுந் தொகை 220ஆவது பாடல் பொருள் விளக்கம் தருகிறது. இந்தப் பாடலில் மழை, முல்லை நிலம், வரகுப்பயிர், கதிர், தாள், ஆண்மான், காட்டுப்பூனை, முல்லைமலர், அரும்பு, வண்டுகள், மாலைப்பொழுது உள்ளிட்ட முதற், கருப்பொருள்களையும் ஆற்றியிருத்தல் என்ற முல்லைநில உரிப்பொருளையும் இப்பாடல் சுட்டுகிறது.

முல்லைத் தலைவி, தமது தோழியிடம் அன்புத் தோழியே! காளைகளும் பசுக்களும் மாலைப்பொழுதில் ஊர் வந்து சேரும். அப்போது கேட்பது, புல் மேய்ந்த நல்ல பசுக்களின் கழுத்திலே பூண்டிருக்கக் கூடிய மணியின் ஓசை தானோ? செயல் முடித்த மனநிறை வோடு வலிய வில்லாற்றலுடைய இளைய வீரர் தம் இருபக்கக் காவலோடு வந்துகொண்டிருக்க ஈரமான மணலு டைய காட்டுவழியில் வரும் தலைவனு டைய தேர்மணியின் ஓசைதானோ? முல்லைக் கொடி படர்ந்துள்ள பாறையின் மேலே ஏறி நின்று, அங்கே ஒலிப்பது யாதென நாமும் சென்று கண்டு வருவோம் வருக! என்பதை,

முல்லை ஊர்ந்த கல் உயர்பு ஏறிக்

கண்டனம் வருகம்; சென்மோ தோழி!

எல்ஊர்ச் சேர்தரும் ஏறுடை இனத்துப்

புல்ஆர் நல்.ஆண் பூண்மணிகொல்லோ;

செய்வினை முடித்த செம்மல் உள்ளமொடு

வல்வில் இளையர் பக்கம் போற்ற,

ஈர்மணற் காட்டாறு வரூஉம்

தேர்மணி கொல்? ஆண்டு இயம்பிய உளவே.

என்ற முல்லைத்திணையிலமைந்த குறுந் தொகை 275ஆவது பாடல் வெளிப் படுத்துகிறது. முல்லைநிலம், முல்லைக் கொடி, காளை, பசு, பசுவின் கழுத்தில் பூட்டப்பட்ட மணி என முதற், கருப் பொருள்களையும் ஆற்றியிருத்தல் என்ற உரிப்பொருளையும் இப்பாடல் சுட்டி நிற்கிறது. இப்பாடலில் இருந்து தலைவி முல்லை நிலத்தவளாகவும் தலைவன் ஒருவேளை மருதநிலத்தவனாகவும் இருக்க வாய்ப்புள்ளது எனக்கருத இடமுண்டு.

உழையர் (ஏவலாளர்), வினைமுற்றி மீளும் தலைமகனின் கருத்துணர்ந்து, தளிர் போன்ற மென்மையுடைய கிளி இனிதாய் வளர்த்த இளைய குஞ்சின் தூவியைப் போன்ற பெய்யும் மழை வளர்த்த பசுமையான பயிரையுடையது காடு. அக்காட்டில் பறையின் கண்ணைப் போன்று விளங்கும் நீரால் நிறைந்த சுனைகள் தோறும், மழை பெய்வதால் உண்டான குழிகள் சேற்றில் தாமரை மொட்டுகள் போலத் தோன்றி மறையும். கிளையினின்றும் காற்று உதிர்த்தலால் மணத்துடன் நீரின்மேல் கிடந்து அழகு செய்த வண்டுகள் தேனுண்ணும் அழகிய மலர்களை அறுத்துச் சென்ற தேரின் சக்கரம், குளிர்ந்த நிலத்தில் பிளந்து போன சுவட்டில், ஒன்றன் பின் ஒன்றாய் வரிசையாய்ப் போகும் பாம்பைப் போல் நீர் விரைந்து செல்லும். முல்லைப் பூக்கள் மலரும் மாலை நேரத்தில் நகரில் புகுவதை எண்ணிய தலைவனின் தேர் செல்லும். அழகிய அணிகலன்களையும் மேன்மையுடைய மூங்கில் போன்ற தோளையும் மடப்பம் வாய்ந்த சொல்லையும் உடைய தலைவி இன்று விருந்து பேணும் பேற்றையும் பெறுவாள் போலும்! என்பதை,

விருந்தும் பெறுகுநள் போலும், திருந்து இழைத்
தடமென பணைத்தோள், மட மொழி அரிவை
தளிர்இயல் கிள்ளை இனிதின் எடுத்த
வளராப் பிள்ளைத் தூவி அன்ன,
உளர்பெயல் வளர்த்த, பைம்பயிர்ப் புறவில்
பறைக்கண் அன்ன நிறைச்சுனை தோறும்
துளிபடு மொக்குள் துள்ளுவன் சால,
தொளிபொரு பொகுட்டுத் தோன்றுவன மாய,
வளிசினை உதிர்த்தலின, வெறிகொள்பு, தாஅய்,
சிரற்சிறகு ஏய்ப்ப அறற்கண் வரித்த
வண்டுண் நறு வீ துமித்த நேமி
தண்நில மருங்கில் போழ்ந்த வழியுள்,
நிரைசெல் பாம்பின் விரைபு, நீர் முடுக.
செல்லும், நெடுந்தகை தேரே.
முல்லை மாலை நகர்புகல் ஆய்ந்தே!

என்ற முல்லைத்திணையிலமைந்த அகநானூறு 324ஆவது பாடல் வெளிப் படுத்துகிறது. தலைவன் தலைவியைக் காணத் தேரில் விரைந்து வந்ததால் தலைவி இன்று விருந்து பேணும் பேற்றைப் பெறுவாள் என்பதே இப்பாடலின் மையம். ஆற்றியிருந்த தலைவிக்கு இது மகிழ்ச்சியான தருணம். இதனுடன் கிளி, கிளிக்குஞ்சு, மழை, பயிர், காடு, பறை, சுனை, சேறு, முல்லை மலர், வண்டு, தேன், மாலைப்பொழுது என முதற், கருப்பொருள்களை அடை யாளப்படுத்தியமை சிறப்பிற்குரியதாகும்.

உழையர் (ஏவலாளர்), வினைமுற்றி மீளும் தலைமகனின் கருத்துணர்ந்து, தேர்ப்பாகனிடம், பாசறையில் இருந்த மன்னன் அரிய போரை வெற்றியுடன் முடித்தான். விரும்பிய காதலுடன் பெரிய தேரில் ஏறி அமர்ந்ததே அல்லா மல் வந்த இயல்பை நன்கு அறியேன். முயற்குட்டிகள் தாவிக் குதிக்கும் முல்லையான அழகிய காட்டில் கவைத்த கதிர்களையுடைய வரகுப் பயிர் மிகுந்த சிறிய ஊரில், மென்மைத் தன்மையுடைய தலைவியின் வீட்டில் தேரை நிறுத்தி இறங்குக என்ற சொல்லைக் கேட்டு நான் பெரிதும் வியப்பை அடைந்தேன். வானில் உலவும் காற்றைக் குதிரையின் வடிவாய்ப் பூட்டி வந்தாயோ! அல்லது உன் மனத்தைக் குதிரை உருவமாகச் செய்து பூட்டி வந்தாயோ! சொல்வாயாக எனக் கூறி, பெருந்தன்மையுடைய தலைவன் தன் மலை போன்ற மார்பில் அத்தேர்ப்பாகனைச் செறியத் தழுவிய படி தனது இல்லத்தினுள் அழைத்துக் கொண்டு போனான். செம்மையான அணிகளையுடைய அவனுடைய தலைவி விருந்தோம்பும் சிறப்பைப் பெற்றாள் என்பதை,

இருந்த வேந்தன் அருந்தொழில் முடித்தென,
புரிந்த காதலொடு பெருந்தேர் யானும்
ஏறியது அறிந்தன்று அல்லது, வந்த
ஆறுநனி அறிந்தன்றோ இலெனே; "தா அய்,
முயற்பறம் உகளும் முல்லைஅம் புறவில்,
கவைக்கதிர் வரகின் சீறூர் ஆங்கண்,
மெல்இயல் அரிவை இல்வயின் நிறீஇ,
இழிமின்" என்ற நின் மொழி மருண் டிசினே;
வான்வழங்கு இயற்கை வளிபூட் டினையோ?
மான்உரு ஆக நின்மனம் பூட் டினையோ?
உரைமதி வாழியோ, வலவ!' என, தன்
வரைமருள் மார்பின் அளிப்பனன் முயங்கி,
மனைக்கொண்டு புக்கனன், நெடுந்தகை;
விருந்துஏர் பெற்றனள், திருந்திழை யோளே.

என்ற முல்லைத் திணையிலமைந்த அகநானூறு 384ஆவது பாடல் பொருள் விளக்கம் தருகிறது. இப்பாடலில் முயல் குட்டிகள், முல்லைக்காடு, வரகுப்பயிர் போன்ற முதற், கருப்பொருள்களும் ஆற்றியிருத்தலாகிய உரிப்பொருளும் இடம்பெற்றுள்ளதை அறிய முடிகிறது.

## மதிப்பீடு

ஒக்கூர் மாசாத்தியாரின் அகப்பாடல்கள் அனைத்தும் அந்தந்த நிலத்திற்குரிய முதற், கரு, உரிப்பொருளைச் சுட்டி நிற்கின்றன. தாம் வாழ்ந்த இயற்கைச் சூழலைப் படைப்பில் அடையாளப் படுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சங்கப் பாடல்களைப் பாடிய ஆண் படைப்பாளிகளை விடப் பெண் படைப் பாளிகளின் பாடல்களில் இயற்கை சார்ந்த பதிவுகள் அதிகளவில் இடம் பெற்றிருப்பதாக உணர்கிறேன்.

இயற்கையை ஒரு தனித்த உயிரியக்க மாகக் கருதிப் பெண்படைப்பாளர்கள் தமது பாடல்களில் பதிவு செய்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சங்கப்பெண்பாற் புலவர்களைக் கடந்து, பிற்காலத்தில் பாடுபொருளுடன் இணைந்து அந்தந்த நிலம் சார்ந்த இயற்கை சூழல் கவிதைகளில் பதிவு செய்யப்பட்டிருக்கிறதா? என்ற கேள்வி உண்டு. இது குறித்து ஓர் ஆய்வை நிகழ்த்த வேண்டியத் தேவையிருக்கிறது.

ஆண்டாள், காரைக்காலம்மையாரின் கவிதைகளிலும் சமகாலப் பெண்படைப் பாளர்களின் கவிதைகளிலும் சூழலியல் பார்வை இருக்கிறதா? என்பது குறித்தும் வாசிப்பை நிகழ்த்த வேண்டும்.

இயந்தரமயமாக்கப்பட்ட இன்றைய நிலையில் சூழலியல் திறனாய்வின் அவசியம் குறித்து ஒரு காத்திரமான விவாதத்தை முன்னெடுக்க வேண்டியத் தேவையிருக்கிறது.

இனி எழுதவரும் படைப்பாளிகள் தமது படைப்புகளில் சூழலியல் சிந்தனையை விதைத்துச் செல்ல வேண்டும் என்ற புரிதலை இக்கட்டுரை விளக்கி நிற்கிறது.

## உதவிய நூல்கள்

1. இரத்தினக்குமார்.ந., 2016, திறனாய்வுக் கோட்பாடுகளும் பன்முக வாசிப்பு களும், முதற்பதிப்பு, கயல்கவின் பதிப்பகம், 46/40, விராயல் ஷேத்ரா, இரண்டாம் தளம், டாக்டர் எம்.ஜி.ஆர்.சாலை, கலாஷேத்ரா காலனி, பெசன்ட் நகர், சென்னை - 600090.
2. சோமசுந்தரனார்.பொ.வே.(உ.ஆ), 2007, குறுந்தொகை மூலமும் உரையும், முதற்பதிப்பு, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி – 06.
3. துரைசாமிப்பிள்ளை.சு.ஔவை.,(உ.ஆ), 2007, புறநானூறு மூலமும் உரையும், முதற்பதிப்பு, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி – 06.
4. பஞ்சாங்கம்.க., 2012, இலக்கியமும் திறனாய்வுக் கோட்பாடுகளும், முதற் பதிப்பு, அன்னம் வெளியீடு, மனை எண் – 1, நிர்மலா நகர், தஞ்சாவூர் - 613007.
5. முருகேசபாண்டியன்.ந.,(தொ.உ.), 2008, அற்றைத் திங்கள் அவ்வெண்ணில வில், முதற்பதிப்பு, காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி. சாலை, நாகர்கோயில் - 629001.
6. வின்சென்ட்.ச., 2019, திறனாய்வுக் கோட்பாட்டாளர்களும் கோட்பாடு களும், முதற்பதிப்பு, பிறழ் வெளியீடு, கதவு எண் – 4/369, ஈ.பி. காலனி, வடிவேல் நகர், மாவுமில் நிறுத்தம், நாகமலை புதுக்கோட்டை, மதுரை - 19.
7. வினோத்குமார்.ந., 2018, வான் மண் பெண், முதற்பதிப்பு, இந்து தமிழ் திசை வெளியீடு, கே.எஸ்.எல்.மீடியா, கஸ்தூரி மையம், 124, வாலஜாசாலை, சென்னை - 02.
8. வேங்கடசாமி நாட்டார்.ந.மு., 2009, வேங்கடாசலம்பிள்ளை.ரா.,(உ.ஆ), அக நானூறு மூலமும் உரையும், முதற் பதிப்பு, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி – 06.
9. Vanathu Antoni.S., 2018, Eco – Feminist Discourse In Tamil, First Edition, Notion Press Media Pvt.Ltd., No.50, Chettiyar Agaram main Road, Vanagaram, Chennai - 95.